தினமணி

## தவிப்பில் மஞ்சள் விவசாயிகள்! ஆதரவுக்கரம் நீட்டுமா அரசு?

கே.விஜயபாஸ்கர்

First Published : 04 Oct 2011 03:35:31 AM IST



ஈரோடு : விலைச்சரிவால் சாகுபடி செலவைக்கூட ஈடுகட்ட இயலாத நிலையில் மஞ்சளை விற்க முடியாமல் பரிதவித்து வருகின்றனர் விவசாயிகள்.

கடந்த ஆண்டில் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் ஈரோடு மஞ்சள் சந்தையில் ஒரு குவிண்டால் மஞ்சள் ரூ.15,000-லிருந்து, ரூ.17,000 வரை விற்பனையானது.

ஆனால் இப்போது ரூ.3,500-லிருந்து, ரூ.4,500 வரை மட்டுமே விற்பனையாகிறது.

கடந்த ஆண்டில் மஞ்சள் விலை அதிகரித்ததன் காரணமாக, ஈரோடு மாவட்டம் மட்டுமல்லாது, தமிழகத்தின் பிற மாவட்டங்களிலும், மகாராஷ்டிரம், உத்தரப்பிரதேசம் போன்ற வட மாநிலங்களிலும் மஞ்சள் சாகுபடி பரப்பு அதிகரித்தது. இது விலைச்சரிவுக்குக் காரணமாகக் கூறப்படுகிறது.

ஈரோடு மாவட்டத்தில் காலிங்கராயன், கீழ்பவானி, தடப்பள்ளி அரக்கன்கோட்டை வாய்க்கால் பாசனப் பகுதிகளில் மஞ்சள் பயிரிடப்படுவது வழக்கம். இங்கு மொத்தப் பாசனப் பரப்பில் 30 சதவீதம் அளவு மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. ஆனால் விலையேற்றம் காரணமாக இப்போது இப்பகுதியில் மட்டும் சுமார் 50,000 ஹெக்டேர் அளவுக்கு மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் 30,000 ஹெக்டேர் அளவு மட்டும் மஞ்சள் பயிரிடப்பட்டிருந்தது. இதுதவிர கிணற்றுப் பாசனம்

உள்ளவர்களும், தண்ணீர் பாயும் அளவுக்கு மஞ்சளை பயிரிட்டுள்ளனர்.

மஞ்சள் விலை ஏற்றம் காரணமாக உழவு,விதை, கூலி என அனைத்துமே இரண்டு மடங்கு உயர்ந்துள்ளது. ஒரு ஏக்கருக்கு சாகுபடி செலவாக ரூ.1 லட்சம் வரை செலவாகிறது. ஆனால் இப்போது ஒரு ஏக்கரில் விளையும் மஞ்சள் ரூ.50,000 முதல் ரூ.70,000 வரையே விற்பனையாகிறது. இதனால் விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.30,000 முதல் ரூ.50,000 வரை இழப்பைச் சந்திக்க வேண்டிய நிலை உள்ளது.

மஞ்சளை 5 ஆண்டுகள் வரை பாதுகாப்பாக வைத்திருக்க முடியும். விலைச்சரிவால் விற்க முடியாமல் பரிதவித்து வரும் விவசாயிகளிடம், அரசு மஞ்சளை ஈடாகப் பெற்றுக்கொண்டு, இப்போது விற்கும் விலையில் 80 சதவீதத் தொகையை வட்டியில்லா கடனாக வழங்க முன்வர வேண்டும்.

கடந்த ஆண்டை ஒப்பிடுகையில், இப்போது மஞ்சள் விலை 300 சதம் சரிந்துள்ளது. மஞ்சள் விலையில் நிலையற்றத் தன்மையைத் தவிர்த்திட, குறைந்தபட்ச விலையை நிர்ணயிக்க வேண்டும். இதன்மூலம் கரும்பு போன்று மஞ்சள் விவசாயிகளிடமும் நம்பிக்கையை ஏற்படுத்த முடியும்.

மஞ்சள் வழக்கமாக மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் அறுவடை செய்யப்பட்டு, அதிக அளவில் சந்தைக்குக் கொண்டுவரப்படும். அறுவடை காலம் இல்லாத இந்த மாதத்தில் மஞ்சள் கடுமையான விலைச்சரிவை சந்தித்துள்ள நிலையில், அறுவடை காலமான மார்ச், ஏப்ரல் மாதங்களில் மேலும் விலைச்சரிவு ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால், மன அழுத்தத்தில் சிக்கித் தவிக்கும் மஞ்சள் விவசாயிகளுக்கு ஆறுதல் தரும் அறிவிப்பை அரசு வெளியிடும் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

**தேயிலை உற்பத்தி 3% உயர்வு**

First Published : 04 Oct 2011 01:25:52 AM IST



புது தில்லி, அக்.3 : நாட்டின் தேயிலை உற்பத்தி ஆகஸ்ட் மாதத்தில் 3 சதவீதமும், ஏற்றுமதி 15 சதவீதமும் அதிகரித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய தேயிலை வாரியம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: இந்தியாவின் தேயிலை உற்பத்தி ஆகஸ்ட் மாதத்தில் 3 சதவீதம் உயர்ந்து 12 கோடியே 70 லட்சம் கிலோவாக இருந்தது. கடந்த 2010ம் ஆண்டு இதே காலத்தில், இது 12 கோடியே 27 கிலோவாக இருந்தது.

இந்த ஆண்டு ஜனவரி-ஆகஸ்ட் மாதத்தில் தேயிலை உற்பத்தி 6 சதவீதம் உயர்ந்து 61 கோடியே 86 லட்சம் கிலோவாக காணப்பட்டது. இதற்கு முந்தைய ஆண்டு இதே காலத்தில் இது 58 கோடியே 48 லட்சம் கிலோவாக இருந்தது.

அஸ்ஸôம் தேயிலைத் தோட்டங்களில் அதிக விளைச்சல் காரணமாக, கடந்த ஆகஸ்ட் மாதத்தில் தேயிலை உற்பத்தி 7 சதவீதம் அதிகரித்து 8 கோடியே 40லட்சம் கிலோவாக அதிகரித்தது. முந்தைய ஆண்டில் இதே காலத்தில் இது 7 கோடியே 86 லட்சம் கிலோவாக இருந்தது. நாட்டின் தேயிலை உற்பத்தியில் 50 சதவீதம் அஸ்ஸôம் மாநிலத்திலிருந்துதான் வருகிறது.

இதுபோன்று, வட இந்தியாவிலும் தேயிலை உற்பத்தி 5 சதவீதம் வரை உயர்ந்து 11 கோடியே 27 லட்சம் கிலோவாக உள்ளது. இதற்கு முந்தைய ஆண்டு இதே காலத்தில் இது 10 கோடியே 78 லட்சம் கிலோ உற்பத்தியானது. தென்னிந்தியாவை பொருத்தவரை, தேயிலை உற்பத்தி 1 கோடியே 42 லட்சம் கிலோவாக உள்ளது. இதற்கு முந்தைய ஆண்டு இதே காலத்தில் இது 1 கோடியே 49 லட்சம் கிலோவாக காணப்பட்டது.

நாட்டின் தேயிலை ஏற்றுமதி கடந்த ஆகஸ்ட் மாதத்தில் 15 சதவீதம் அதிகரித்து 1 கோடியே 94 லட்சம் கிலோவாக இருந்தது. கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் இது 1 கோடியே 68 லட்சம் கிலோவாக இருந்தது. 2010 ம் ஆண்டில் முதல் 8 மாதங்களில் தேயிலை ஏற்றுமதி 12 கோடியே 41 லட்சம் கிலோவாக இருந்தது. ஆனால் நடப்பு ஆண்டின் முதல் 8 மாதங்களில் இது 12 சதவீதம் சரிந்து 10 கோடியே 92 லட்சம் கிலோவானது.

கடந்த ஆகஸ்ட் மாதம் வட இந்தியாவிலிருந்து தேயிலை ஏற்றுமதி 23 சதவீதம் அதிகரித்து 1.1 கோடி கிலோவாக உயர்ந்தது. ஆனால், 2010ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இது 89 லட்சம் கிலோவாக இருந்தது. தென்னிந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் தேயிலையின் அளவு 7 சதவீதம் அதிகரித்து 84 லட்சம் கிலோவாக உள்ளது.

உலக அளவில் தேயிலை உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளதாக இந்திய தேயிலை வாரியம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2010-11 ல் காபி ஏற்றுமதி 34 % அதிகரிப்பு

First Published : 04 Oct 2011 01:25:23 AM IST

புது தில்லி,அக்.3 : உலகளவில் அதிகரித்துவரும் காபி பிரியர்களின் எண்ணிக்கை காரணமாக, 2010-11ம் ஆண்டில் ( காபி பருவ ஆண்டில்) இந்தியாவின் காபி ஏற்றுமதி 34 சதவீதம் உயர்ந்துள்ளது.

இது தொடர்பாக காபி வாரியம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு: இந்தியாவிலிருந்து இத்தாலி, ஜெர்மனி, ரஷியா, பெல்ஜியம், ஸ்பெயின் போன்ற நாடுகளுக்கு அதிக அளவில் காபி ஏற்றுமதி செய்யப்படுகிறது.

2010-11ம் ஆண்டு இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட காபியின் அளவு 34 சதவீதம் உயர்ந்து 3.58 லட்சம் டன்களாக உள்ளது. 2009ம் ஆண்டில் 2.68 லட்சம் டன் காபி ஏற்றுமதியானது.

காபி ஏற்றுமதிக்கான விலையும் 31 சதவீதம் உயர்ந்து டன் ஒன்றுக்கு ரூ.1,33,804 ஆக அக்டோபர் மாதம் அதிகரித்துள்ளது.

நடப்பு ஆண்டின் முதல் 9 மாதங்களில், காபி ஏற்றுமதி 30 சதவீதம் உயர்ந்து 2.92 லட்சம் டன் ஆக இருந்தது. இதற்கு முந்தைய ஆண்டு இதே காலத்தில் இது 2.24 லட்சம் டன் ஆக இருந்தது. நடப்பு நிதி ஆண்டில், ஏப்ரல்-செப்டம்பர் வரையிலான காலத்தில், காபி ஏற்றுமதி 25 சதவீதம் உயர்ந்து 1.53 லட்சம் டன்னிலிருந்து 1.92 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.

காபி ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருமானம் 74 சதவீதம் உயர்ந்து ரூ.4,793.91 கோடியாக உள்ளது.

முந்தைய காபி பருவ ஆண்டில், இது ரூ.2,754.43 கோடியாக இருந்தது. 2010-11ம் காபி பருவ ஆண்டில் காபி ஏற்றுமதி டாலர் மதிப்பில் 81 சதவீதம் உயர்ந்து 1,048.1 மில்லியன் டாலர்களாக உள்ளது.

2009-10ம் காபி பருவ ஆண்டில் இது 577.98 மில்லியன் டாலர்களாக இருந்ததாக காபி வாரியத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நெல் கொள்முதல் விலை அதிகரிப்பு

First Published : 04 Oct 2011 02:26:38 AM IST



சென்னை, அக். 3: நடப்பு குறுவை மற்றும் சம்பா சாகுபடிகளுக்கான நெல் கொள்முதல் தொடங்கப்பட்டுள்ளது. சன்னரக நெல் குவிண்டாலுக்கு ரூ.1,180-ம், சாதாரண நெல் குவிண்டாலுக்கு ரூ.1,130 என நிர்ணயித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து, உணவுத் துறை செயலாளர் டி.என்.ராமநாதன் வெளியிட்டுள்ள உத்தரவு:

கடந்த ஆண்டின் பருவ காலத்தில் சன்னரக நெல் குவிண்டாலுக்கு ரூ.1,100 எனவும், சாதாரண ரக நெல் குவிண்டாலுக்கு ரூ.1,050 எனவும் நிர்ணயித்து மத்திய அரசு உத்தரவிட்டது. இந்த உத்தரவு, கடந்த ஆண்டு அக்டோபர் 1-ம் தேதி முதல் இந்த ஆண்டு செப்டம்பர் 30-ம் தேதி வரை அமலில் இருந்தது.

நடப்பு பருவ காலத்தில் குறைந்தபட்ச ஆதார விலையாக சன்னரக நெல் குவிண்டாலுக்கு ரூ.1,110 எனவும், சாதாரண ரக நெல் குவிண்டாலுக்கு ரூ.1,080 எனவும் கொள்முதல் செய்ய மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

விவசாயிகளின் நலன் கருதி: தமிழக விவசாயிகளின் நலன் கருதி மத்திய அரசு அறிவித்துள்ள விலையை விட கூடுதலாக வழங்க மாநில அரசு முடிவெடுத்து உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, சாதாரண ரக நெல் குவிண்டாலுக்கு ரூ.50-ம், சன்னரக நெல் குவிண்டாலுக்கு ரூ.70-ம் அதிகரித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி, சன்னரக நெல் குவிண்டாலுக்கு ரூ.1,180 எனவும், சாதாரண ரக நெல் குவிண்டாலுக்கு ரூ.1,130 என்ற அளவிலும் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும்.

இந்த கொள்முதல் விலை அக்டோபர் 1-ம் தேதி முதல் அடுத்த ஆண்டு செப்டம்பர் 30-ம் தேதி வரை அமலில் இருக்கும்.

கூடுதல் கொள்முதல் நிலையங்கள்: நெல் அதிகளவு விளையும் காவிரி டெல்டா பகுதிகளிலும், மாநிலத்தின் இதர பகுதிகளிலும் தேவையான அளவுக்கு நெல் கொள்முதல் நிலையங்களை மாவட்ட ஆட்சியர்களின் ஆலோசனையைப் பெற்று திறக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

காவிரி டெல்டா இல்லாத பிற பகுதிகளில் நெல் வரத்தைப் பொறுத்து மாவட்டக் கொள்முதல் மையங்களை ஏற்படுத்தவும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

காவிரி டெல்டா இல்லாத பிற பகுதிகளில், கூட்டுறவு வர்த்தக சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் நெல் கொள்முதல் செய்ய கூட்டுறவு சங்கங்களின்

பதிவாளர் கேட்டு கொள்ளப்பட்டுள்ளார் என்று டி.என்.ராமநாதன் வெளியிட்டுள்ள உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு எவ்வளவு? கடந்த ஆண்டு சன்னரக நெல் குவிண்டாலுக்கு ரூ.1,100 எனவும், சாதாரண வகை நெல் குவிண்டாலுக்கு ரூ.1,050 என்ற விலையிலும் கொள்முதல் செய்யப்பட்டது. இந்த விலை போதாது என விவசாயிகள் கருத்துத் தெரிவித்தாலும், அதிகளவு நெல் கொள்முதல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கடந்தப் பருவத்தில் மட்டும் (கடந்த ஆண்டு அக்டோபர் முதல் இந்த ஆண்டு செப்டம்பர் வரை) தமிழக அரசின் கொள்முதல் நிலையங்கள் மூலமாக 23.03 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு கொள்முதல் அளவு மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**காபி ஏற்றுமதி 34 சதவீதம் உயர்வு**

அக்டோபர் 04,2011,01:54



புதுடில்லி:உலகளவில், இந்திய காபிக்கான தேவை அதிகரித்து வருவதால், இதன் ஏற்றுமதி அண்மையில் நிறைவடைந்த 2010-11ம் பருவத்தில் (அக்டோபர்-செப்டம்பர்) 34 சதவீதம் அதிகரித்து, 3.58 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இது, சென்ற 2009-10ம் காபி பருவத்தில், 2.68 லட்சம் டன்னாக இருந்தது என, இந்திய காபி வாரியம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்ற 2010ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், விலை அதிகரிப்பால், ஒரு டன் காபி விலை 31 சதவீதம் உயர்ந்து, 1 லட்சத்து 33 ஆயிரத்து 804 கோடி ரூபாயாக அதிகரித்தது. இது, இதற்கு முந்தைய ஆண்டின் இதே மாதத்தில், 1 லட்சத்து 2 ஆயிரத்து 406

கோடி ரூபாயாக இருந்தது. அண்மையில் நிறைவடைந்த 2010-11ம் ஆண்டு காபி பருவத்தில், மதிப்பின் அடிப்படையிலான இதன் ஏற்றுமதி 74 சதவீதம் அதிகரித்து, 4,794 கோடி ரூபாயாக உள்ளது. இது, கடந்த 2009-10ம் காபி பருவத்தில், 2,754 கோடி ரூபாயாக இருந்தது.இதே காலத்தில், நாட்டின் காபி ஏற்றுமதி, டாலர் மதிப்பின் அடிப்படையில், 81 சதவீதம் உயர்ந்து, 57.80 கோடி டாலரிலிருந்து, 104.81 கோடி டாலராக அதிகரித்துள்ளது. நடப்பு 2011ம் காலண்டர் ஆண்டின் ஜனவரி முதல் செப்டம்பர் வரையிலான ஒன்பது மாதங்களில், இந்தியாவின் காபி ஏற்றுமதி 30 சதவீதம் அதிகரித்து, 2.92 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே மாதங்களில், 2.24 லட்சம் டன்னாக இருந்தது.நடப்பு நிதியாண்டின், ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான ஆறு மாத காலத்தில், காபி ஏற் றுமதி 1.92 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இது, கடந்த நிதியாண்டின் இதே காலத்தை விட, 25 சதவீதம் ( 1.53 லட்சம் டன்) அதிகமாகும்.

**நெல் கொள்முதல் விலை உயர்வு**

அக்டோபர் 04,2011,09:44



சென்னை:விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு, நெல் கொள்முதல் விலையை உயர்த்தி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.இந்திய அளவில், நெல் விலையை உயர்த்த வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசு, நெல் உட்பட உணவுப் பொருட்களுக்கான குறைந்தபட்ச விலையை நிர்ணயிக்கும்.அதன் அடிப்படையில், இந்தாண்டு குறுவை மற்றும் சம்பா கொள்முதல் செய்யப்படும் முதல் ரக (ஏ கிரேடு) நெல், குவின்டாலுக்கு 1,110 ரூபாய், சாதாரண நெல் ரகம், குவின்டாலுக்கு 1,080 ரூபாய் என்ற குறைந்தபட்ச விலையாக நிர்ணயித்து, மத்திய அரசு உத்தரவிட்டது. ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசு, மத்திய அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச தொகையை விட, குவின்டாலுக்கு கூடுதலாக ஊக்கத் தொகையை அளிக்கும். இந்தாண்டு தமிழக அரசு, முதல் ரக(ஏ கிரேடு) நெல்லுக்கு, குவின்டாலுக்கு 70 ரூபாயும் (1,110+70=1,180), சாதாரண நெல் ரகம் குவின்டாலுக்கு 50 ரூபாயும் (1,080+50=1,130) உயர்த்தி

உத்தரவிட்டுள்ளது.இந்த உத்தரவு, இந்தாண்டு அக்., 1ம் தேதி முதல் அடுத்தாண்டு செப்., 30ம் தேதி வரை அமலில் இருக்கும்.

**கடும் வெயிலால் பூக்கள் உற்பத்தி குறைவு :ஆயுதபூஜைக்கு விலை கடும் உயர்வு**பதிவு செய்த

நாள் : அக்டோபர் 04,2011,00:35 IST

கோபிசெட்டிபாளையம் : ஆயுத பண்டிகை காரணமாக பூக்கள் விலை கிடுகிடு வென உயர்ந்துள்ளது. சீதோஷ்ணநிலை, கடுமையான வெயில் காரணமாக பூக்கள் உற்பத்தி குறைந்து காணப்படுகிறது. கோபி அரக்கன்கோட்டை, தடப்பள்ளி மற்றும் கீழ்பவானி பாசன பகுதிகளில் ஆண்டுதோறும் நெல், கரும்பு, வாழை உள்ளிட்ட பயிர்கள் அதிகளவில் பயிரிடப்பட்டு வருகிறது. ஆண்டு முழுவதும் தண்ணீர் வசதியுள்ள கோபி பகுதியில் சீஸனுக்கு ஏற்ப பயிர் சாகுபடி செய்வதில் விவசாயிகள் முதலிடத்தில் உள்ளனர். விவசாய கூலி ஆட்கள் பற்றாக்குறையால் மல்பெரி, பப்பாளி, மரவள்ளி மற்றும் கத்தரிக்காய், வெண்டைக்காய் உள்ளிட்ட, தோட்டக்கலைப் பயிர்களை மாற்றாக பயிரிடத் துவங்கினர். மாவுப்பூச்சி தாக்குதலால் மல்பெரி, மரவள்ளி மற்றும் பப்பாளி உள்ளிட்ட பயிர்களின் சாகுபடியும் கணிசமான அளவில் குறைந்து வருகிறது.

கோபி மற்றும் சுற்று வட்டார பணப்பயிராக பூ சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்ட துவங்கி உள்ளனர். திருமண விசேஷ காலங்களில் பூக்களுக்கு கடும் கிராக்கி ஏற்படும். ஆயுத பூஜை என்பதால் பூக்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளதோடு, விலையும் "கிடுகிடு' வென உயர்ந்து வருகிறது. திருமண சீஸனில் மல்லிகை, கனகாம்பரம், சம்பங்கி போன்ற பூக்கள் பெண்களிடம் அதிக வரவேற்பு உள்ளது. கோவில்கள் மற்றும் அம்மன் திருவுருவச் சிலைகளுக்கு மஞ்சள் சாமந்தி, சிவப்பு சாமந்தி மற்றும் கோழிக்கொண்டை பூக்களாலான மாலைகள் அணிவிப்பது வழக்கம். ஆயுத பூஜை மற்றும் திருமணம், கோவில் திருவிழாக்கள் தொடர்ந்து நடக்க உள்ளதால் மல்லிகை, கனகாம்பரம், கோழிக்கொண்டை ஆகிய பூக்களை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.

கோபியை அடுத்த கடத்தூர், வெட்டையம்பாளையம், மாக்கினாங்கோம்பை, குருமந்தூர், சாணர்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் சம்பங்கி, செண்டுமல்லி, குண்டுமல்லி மற்றும் கோழிக்கொண்டை பூக்கள் பயிரிடப்பட்டுள்ளன. விவசாயிகள் கூறியதாவது: நிலக்கோட்டை பகுதியில் இருந்து சம்பங்கி கிழங்கு வாங்கி வந்து பயிரிட்டுள்ளோம். ஒரு மூட்டை கிழங்கு 750 ரூபாய்ல, ஒரு ஏக்கருக்கு 12 மூட்டை கிழங்கு விதையாக பயன்படுத்த வேண்டும். சம்பங்கி ஒரு

முறை பயிரிட்டால் ஐந்து முதல் ஏழு ஆண்டுகள் வரை பூ பறிக்கலாம். குண்டு மல்லியும் ஐந்து ஆண்டுகள் வரை பூ பறிக்க முடியும். சம்பங்கிக்கு மூன்று நாளுக்கு ஒரு முறையும், குண்டு மல்லிக்கு வாரம் ஒரு முறையும் தண்ணீர் விட வேண்டும். தற்போது, நிலவும் மின்தடை மற்றும் கடும் வெயிலால் பூ விளைச்சல் குறைந்து விட்டது. சென்ற வாரத்தில் சம்பங்கி கிலோ 70 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நடப்பு வாரத்தில் ஒரு கிலோ 170 ரூபாயாக உயர்ந்துள்ளது. குண்டுமல்லி கிலோ 350 முதல் 400 ரூபாய், முல்லை பூ கிலோ 300 ரூபாய், கனகாம்பரம் 450 ரூபாய், செண்டுமல்லி 35 ரூபாய், பட்டுப்பூ (கோழிக்கொண்டை) 70 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. பூ விளைச்சல் குறைவாக உள்ளதால் சென்ற இரு நாட்களில் 100 முதல் 150 ரூபாய் உயர்ந்துள்ளது. ஆயுத பூஜை நேரத்தில் இவ்விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**"தென்னை நார் கழிவுகளை ஏற்றுமதி செய்தால் அதிக லாபம் பெறலாம்'**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 04,2011,01:01 IST

பொள்ளாச்சி : "தென்னை நார் கழிவுகளை வீணாக்காமல், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் அதிக லாபம் ஈட்டலாம்' என, கல்லூரியில் நடந்த கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது.பொள்ளாச்சி சரஸ்வதி தியாகராஜா கல்லூரியில், "தென்னை நார் கழிவிலிருந்து உரம் தயாரித்தல்' குறித்த கருத்தரங்கு நடந்தது. கல்லூரி தலைவர் விஜயமோகன் வரவேற்றார். பொள்ளாச்சி கயிறுவாரிய மண்டல அலுவலர் பூபாலன் தலைமை வகித்தார்.நார் கழிவு உற்பத்தி மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்க தலைவர் மகேஷ்குமார் பேசியதாவது:தேங்காயிலிருந்து பிரித்
தெடுக்கப்படும் நார் பொருட்கள் மட்டும் வெளிநாடுகளுக்கு அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. நார் கழிவுகள் ரோட்டோரங்களில் கொட்டப்படுகிறது. ஆனால், தற்போது நார் கழிவுகளை, உரகட்டிகØளாக மாற்றி ஏற்றுமதி செய்து வருகின்றனர். இதன்மூலம், கடந்த 15 ஆண்டுகளுக்கு முன் ஒரு கோடி ரூபாயாக இருந்த வர்த்தகம் தற்போது, 17.5 கோடியாக அதிகரித்துள்ளது.இதே நிலை நீடித்தால், இன்னும் நான்காண்டுகளில், நார்கழிவுகளை ஏற்றுமதி செய்வதன் மூலம் 500 கோடி ரூபாய்க்கு வர்த்தகம் செய்ய முடியும்.பொள்ளாச்சியில், தென்னை விவசாயம் அதிகளவில் செய்யப்படுகிறது. இதனால், தினமும் 800 டன் தென்னை நார் கழிவு கிடைக்கின்றது. விவசாய நிலங்களில், பயிர்களுக்கு இயற்கை உரம் போன்று இவற்றை பயன்படுத்தலாம். இந்தியாவில், தென்னை நார் கழிவுகள் மூலம் ஆண்டுக்கு 800 கோடி ரூபாய்க்கு வர்த்தகம் நடக்கிறது. பொள்ளாச்சியில், 250 கோடி ரூபாய்க்கு வர்த்தகம் செய்யப்படுகிறது. எனவே, விவசாயிகள் தென்னை நார் கழிவுகளை பயன்படுத்த அக்கறை செலுத்த வேண்டும், என்றார்.திருச்சி பாரதிதாசன் பல்கலை தேசிய கடல்சார் சயனோ பாக்டீரியா ஆய்வுதுறை இணை

பேராசிரியை மல்லிகா பேசினார். மாணவர்கள், பேராசிரியர்கள் உட்பட பலர் பங்கேற்றனர். முதல்வர் வெங்கடேஷ்வரன் நன்றி கூறினார்.

**பருவமழை தாமதமாவதால் உடுமலை பகுதியில் கருகும் பயிர்களை காப்பாற்ற விவசாயிகள் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 04,2011,01:21 IST

உடுமலை : வடகிழக்கு பருவமழை குறித்த நேரத்தில் துவங்காமல் கடும் வெயில் கொளுத்தி வருவதால் உடுமலை பகுதியில் வறட்சி துவங்கியுள்ளது. மக்காசோளம், சின்னவெங்காயம் உட்பட பயிர்கள் கருகி வருவதால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.உடுமலை பகுதி விவசாயத்திற்கு ஆதாரமாக தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை உள்ளது. பருவமழையை அடிப்படையாக கொண்டு அமராவதி மற்றும் திருமூர்த்தி அணை பாசனமும், நிலத்தடி நீர் மட்டமும் உள்ளது.இப்பகுதியில் பல ஆண்டுகால பயிரான தென்னை அதிகளவு பயிரிடப்பட்டுள்ளது. தொடர்ந்து காய்கறி பயிர்களும், மழைக்காலங்களில் மானாவாரி சாகுபடியும் மேற்கொள்ளப்படுகிறது. ஆண்டுதோறும் செப்., மாதத்தில் துவங்கும் பருவமழையை அடிப்படையாக கொண்டு காரீப் பருவ சாகுபடி இப்பகுதியில் மேற்கொள்ளப்படுகிறது. செப்., மாதம் முடிந்து அக்., மாதம் துவங்கியும் இதுவரை பருவமழை பெய்யவில்லை. ஜூன் மாதத்தில் பெய்த தென்மேற்கு பருவமழைக்கு பிறகு பல மாதங்கள் மழையில்லாததால் நிலத்தடி நீர் மட்டம் அதல பாதாளத்திற்கு சென்றுள்ளது. இதனால், உடுமலை பகுதி விவசாயத்தின் உயிர்நாடியாக உள்ள கிணற்று பாசனம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.பல கிணறுகள் வற்றியுள்ள நிலையில், நீர் வரத்து அளிக்கும் குளங்களும் தண்ணீர் இல்லாமல் வறண்டுள்ளன. உடுமலை, குடிமங்கலம் வட்டாரத்தில் திருமூர்த்தி அணையிலிருந்து தண்ணீர் பெறும் ஏழு குள பாசன குளங்களை தவிர்த்து பிற குளங்கள் அனைத்தும் வறண்டுள்ளன. பருவமழை மற்றும் பி.ஏ.பி., பாசனத்திற்காக கடந்த மாதம் 50 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமாக பயிரிடப்பட்ட மக்காச்சோளம், பருத்தி, சின்னவெங்காய பயிர்கள் கொளுத்தும் வெயிலால் வாடி வருகிறது.வழக்கத்தை காட்டிலும் கடந்த சில நாட்களாக உடுமலை பகுதியில் வெயில் கொளுத்தி வருகிறது. சராசரியாக 35 டிகிரி செல்சியஸ் வரை அதிகரித்துள்ள வெப்பத்தால் சாகுபடி பயிர்கள் பாதிக்கப்பட்டு பல்வேறு நோய் தாக்குதல்களும் ஏற்பட்டுள்ளது.வறட்சியை சமாளிக்க விவசாயிகள் போர்வெல்கள் அமைத்தல், கிணறுகளை ஆழப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொண்டாலும் சீரான மும்முனை மின்சார வினியோகம் இல்லாதது விவசாயிகளின் வேதனையை அதிகரித்துள்ளது.பல்வேறு இடங்களில் போதிய தண்ணீர் கிடைக்காமல் பல ஆண்டுகால பயிரான தென்னை வாடி வருகிறது. தண்ணீரை பல்வேறு இடங்களில் விலைக்கு வாங்கி ஊற்றி மரங்களை காப்பற்ற வேண்டிய நிலைக்கு

விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியிலும் பருவமழை இல்லாததால் அமராவதி அணைக்கு நீர் வரத்து குறைந்துள்ளது. நேற்றைய நிலவரப்படி நீர் வரத்து ஆறுகளில் வினாடிக்கு 25 கன அடி தண்ணீர் மட்டுமே வரத்து உள்ளது. திருமூர்த்தி அணைக்கு பாலாற்றில் முற்றிலுமாக நீர் வரத்து குறைந்துள்ளது.நீண்ட கால பயிர்கள் மற்றும் பல ஆயிரம் ரூபாய் செலவிட்டு நடவு செய்துள்ள காய்கறி பயிர்கள் கருகி வருவதை தடுக்க அரசு உதவ வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர். குறிப்பாக, பி.ஏ.பி. பாசனப்பகுதிகளிலுள்ள குளங்களுக்கு தண்ணீர் அளிக்க வேண்டும். பிற பகுதிகளுக்கு அணையிலிருந்து உயிர் தண்ணீர் வழங்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.இதற்கு சாத்தியகூறுகள் குறைவாக உள்ள நிலையில், வடகிழக்கு பருவமழை ஒன்றே விவசாயிகளின் பிரச்னைக்கு தீர்வாக அமையும்.

**வெள்ளை பூசணி விற்பனை அமோகம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 03,2011,23:44 IST

ஓசூர்: ஓசூர் பகுதியில் ஆயுதப்பூஜையையொட்டி திருஷ்டி பூசணிக்காய் விற்பனை சூடுபிடித்துள்ளது. தொழில்நகரமான ஓசூர் பகுதியில் ஏராளமான தொழிற்சாலைகள், தனியார் நிறுவனங்கள் உள்ளன. அதனால், ஆண்டுதோறும் ஆயுதபூஜை பண்டிகையை தொழிலாளர்கள் உற்சாகமாக கொண்டாடி வருகின்றனர். நடப்பாண்டு ஆயுதப்பூஜை பண்டிகை வரும் 5ம் தேதி நடக்கிறது. அதனால் ஆயுதபூஜையை சிறப்பாக கொண்டாட அனைத்து தொழிற்சாலைகளும், தனியார் நிறுவனங்களும் தயராகி வருகின்றனர். ஓசூர் நகர சாலைகளில் ஆயுதபூஜை பண்டியை குறி வைத்து பொறி, திருஷ்டி பூசணி வியாரம் சூடுபிடித்துள்ளது. ராயக்கோட்டை சாலை, பாகலூர் சாலை, பெங்களூரு சாலை உள்ளிட்ட பல்வேறு நகர சாலைகளில் விற்பனையாக்காக பொரி மூட்டைகள், திருஷ்டி பூசணிக்காய்கள் குவிக்கப்பட்டுள்ளன. இதில், 5 முதல் 8 கிலோ வரையுள்ள ஒரு திருஷ்டி பூசணிக்காய் 150 ரூபாயில் இருந்து 200 ரூபாய்க்கும், 2 கிலோ முதல் 4 கிலோ வரையுள்ள பூசணிக்காய்கள் 100 ரூபாய்க்கும் விற்பனை செய்கின்றனர். பொதுமக்கள், ஆயுதபூஜைக்காக ஆர்வமாக வீதிகளில் விற்பனை செய்யப்படும் திருஷ்டி பூசணிக்காய், பொறிகளை வாங்கி செல்கின்றனர்.

---

## ஆயுத பூஜை, விஜயதசமியால் பூக்கள் விலை கிடுகிடு உயர்வு

பதிவு செய்த நாள் : 10/4/2011 0:10:41



ஆரல்வாய்மொழி : ஆயுத பூஜை, விஜய தசமியை முன்னிட்டு தோவாளை பூ மார்க்கெட்டில் பூக்கள் விலை கிடு கிடு வென உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தமிழகத்தில் உள்ள முக்கிய பூ மார்க்கெட்டுகளில் தோவாளையும் ஒன்று. இங்கிருந்து பிச்சி, மல்லிகை, மரிக்கொழுந்து, அரளி, துளசி, கிரேந்தி, வாடாமல்லி, கோழிக்கொண்டை, கனகாம்பரம், முல்லை ஆகிய பூக்கள் தமிழ்நாடு, கேரளா மற்றும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன.

நவராத்திரி பண்டிகை தொடங்கியதையடுத்து கடந்த சில நாட்களாகவே பூக்களின் விலை சற்று அதிகரித்திருந்தது. இந்நிலையில், நேற்று பூக்கள் விலை மேலும் உயர்ந்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன் ரூ.100க்கு விற்ற பிச்சிப்பூ நேற்று ரூ.400 ஆக உயர்ந்துள்ளது. இதே போல் ரூ.200க்கு விற்ற மல்லி ரூ.400 ஆகவும், ரூ.20க்கு விற்ற அரளி ரூ.80 ஆகவும், ரூ.30க்கு விற்ற சம்பங்கி ரூ.100 ஆகவும் விலை உயர்ந்துள்ளது. வரும் 5, 6 ஆகிய தேதிகளில் ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜை, விஜய தசமி விழாக்கள் வரவுள்ளதால் பூக்கள் விலை மேலும் உயரும் என வியாபாரிகள் தெரிவித்தனர். பூக்கள் விலை உயர்வால் அவற்றை பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**தேயிலை ஏற்றுமதி ஆகஸ்டில் 15% உயர்வு**

பதிவு செய்த நாள் : 10/4/2011 0:9:9



புதுடெல்லி: நாட்டின் தேயிலை உற்பத்தி கடந்த ஆகஸ்ட் மாதத்தில் 3 சதவீதம் அதிகரித்தது. 2010ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மொத்தம் 12.27 கோடி கிலோ தேயிலை உற்பத்தியானது. அது இந்த ஆண்டு ஆகஸ்ட்டில் 12.70 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது. அதேபோல, கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 1.68 கோடி கிலோ தேயிலை பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

அது இந்த ஆண்டு ஆகஸ்ட்டில் 1.94 கோடி கிலோவாக உயர்ந்தது. ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை 8 மாதங்களில் தேயிலை உற்பத்தி 6 சதவீதம் அதிகரித்து 61.86 கோடி கிலோ ஆனது. இது முந்தைய ஆண்டின் இதே காலத்தில் 58.48 கோடி கிலோவாக இருந்தது. இந்த புள்ளிவிவரங்களை தேயிலை வாரியம் வெளியிட்ட செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

---

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

***மத்திய அரசின் குறைந்தபட்ச ஆதரவு விலையை விட நெல் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ.70 உயர்வு தமிழக அரசு உத்தரவு***

*சென்னை, அக்.4–*

மத்திய அரசின் குறைந்த பட்ச ஆதரவு விலையைக் காட்டிலும் நெல் கொள்முதல் விலையை குவிண்டாலுக்கு ரூ.70 உயர்த்தி வழங்க தமிழக அரசு உத்தரவிட்டு உள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசின் உணவு, கூட்டுறவு, நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் டி.என்.ராமநாதன் வெளியிட்டுள்ள உத்தரவில் கூறி இருப்பதாவது:–

நெல் கொள்முதல் விலை உயர்வு

கடந்த நிதி ஆண்டில் கரீப் பருவ கொள்முதல் காலத்தின்போது சாதாரண நெல் குவிண்டாலுக்கு ரூ.1,050–க்கும், சன்னரக நெல் (கிரேடு ஏ) குவிண்டாலுக்கு ரூ.1,100–க்கும் கொள்முதல் செய்யப்பட்டது. இந்த நிலையில், நடப்பு நிதி ஆண்டில் (2011–2012) கரீப் கொள்முதல் காலத்திற்கு மத்திய அரசு குறைந்தபட்ச ஆதரவு விலையாக சன்ன ரக நெல்லுக்கு குவிண்டால் ரூ.1,110–ம் என்றும் சாதாரண நெல்லுக்கு குவிண்டால் ரூ.1,080 என்றும் நிர்ணயித்து இருக்கிறது.

இதைத் தொடர்ந்து, தமிழக அரசு விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு மத்திய அரசு நிர்ணயித்துள்ள நெல்லுக்கான குறைந்த பட்ச ஆதரவு விலையோடு கூடுதலாக ஊக்கத்தொகை வழங்க முடிவு செய்துள்ளது. அதன்படி, சாதாரண நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.50–ம், சன்னரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.70–ம் ஊக்கத்தொகை வழங்கப்படும்.

விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை

இதையடுத்து, நடப்பு நிதி ஆண்டின் கரீப் பருவத்தில் சன்னரக நெல்லை குவிண்டாலுக்கு ரூ.1,180 என்ற விலையிலும், சாதாரண நெல் குவிண்டாலுக்கு ரூ.1,130 என்ற விலையிலும் கொள்முதல் செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்திற்கு அனுமதி அளிக்கப்படுகிறது. காவிரி டெல்டா பகுதிகளிலும், நெல் பயிரிடப்படும் இதர இடங்களிலும் சாதாரண நெல்லை தேவை அடிப்படையில் கொள்முதல் செய்ய வசதியாக அந்த பகுதிகளில் தேவையான கொள்முதல் மையங்கள் திறக்கப்படும்.

மேலும், டெல்டா மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்டங்களில் கலெக்டர்கள் நெல் வரத்துக்கு ஏற்பட நேரடி கொள்முதல் மையங்களை திறந்து கொள்ளலாம். அது மட்டுமல்லாமல் டெல்டா மாவட்டங்கள் அல்லாத இதர மாவட்டங்களில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மூலமாக கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் நெல்லை கொள்முதல் செய்து கொள்ளவும் அனுமதி அளிக்கப்படுகிறது.

இவ்வாறு அந்த உத்தரவில் கூறப்பட்டு உள்ளது.

கூடுதலாக கிடைக்கும்

அரசின் இந்த உத்தரவை தொடர்ந்து, 1.10.2011 முதல் கொள்முதல் செய்யப்படும் சாதாரண நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.1,130 (ரூ.1080 மற்றும் ரூ.50 ஊக்கத்தொகை) விவசாயிகளுக்கு கிடைக்கும். இதேபோல், சன்னரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.1,180 (ரூ.1,110 மற்றும் ரூ.70 ஊக்கத்தொகை) பெறுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# உற்பத்தி அதிகரிப்பால் உணவு பொருள்களின் விலை குறைய வாய்ப்பு



*நிதிநாத் ஸ்ரீனிவாஸ்,புதுடெல்லி*

*விளைச்சல் அதிகரித்துள்ளதால் உணவு தானியங்கள், சமையல் எண்ணெய் மற்றும் சர்க்கரை ஆகியவற்றின் விலை குறையலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன. இதன் காரணமாக, பண்டிகை கால கொண்டாட்டங்கள் சிறப்பாக இருக்கும் என்று கூறப்படுகிறது. எண்ணெய் வித்துக்கள், அரிசி மற்றும் கரும்பு உற்பத்தி கடந்த ஆண்டின் உற்பத்தியை விஞ்சும் என கூறப்படுகிறது.*

*கடந்த ஓராண்டாக உணவுப்பொருள்களின் விலை கட்டுக்கடங்காமல் உயர்ந்து வந்ததையடுத்து, சராசரியாக மக்கள் வருமானத்தில் 50 சதவீதத்தை உணவுக்காக செலவிடும் நிலை இருந்து வந்தது.*

*அரிசி*

*மத்திய வேளாண் அமைச்சக மதிப்பீடுகளின்படி, கடந்த ஆண்டைவிட நடப்பாண்டில் எண்ணெய் வித்துக்கள், அரிசி மற்றும் கரும்பு ஆகியவற்றின் சாகுபடி அதிகரிக்கும் என்று தெரிகிறது.*

*சோயா உற்பத்தி 110 லட்சம் டன்னை எட்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதால், எண்ணெய் வித்து விளைச்சல் 4 சதவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*நாட்டில், நெல் பயிரிடப்படும் நிலத்தின் அளவு 30 லட்சம் ஹெக்டேர் அதிகரித்துள்ளதால், அரிசி விளைச்சல் 60 லட்சம் டன் அதிகரித்து மொத்த விளைச்சல் 870 லட்சம் டன்னாக உயரும். இந்த அதிகப்படியான 60 லட்சம் டன் அரிசி உற்பத்தி மூன்று மாத ரேஷன் வழங்குதலுக்கு போதுமானதாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.*

*கரும்பு*

*அதேபோல், கரும்பு சாகுபடி செய்யப்படும் நிலத்தின் அளவும் அதிகரிக்கப்பட்டுள்ளதால், சர்க்கரை உற்பத்தி 2.65 கோடி டன்னை எட்டும் என்கிறது ஒரு புள்ளி விபரம்.*

*ஏற்கனவே உள்ள கையிருப்புடன் தற்போதைய உற்பத்தியும் சேர்ந்து அரசின் அரிசி கையிருப்பு*

முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு 270 லட்சம் டன்னாக உயரும்.
கடந்த ஆகஸ்ட் மாதத்தில் வர்த்தகத்துக்கான கையிருப்பாகவும், துறைமுகங்களிலும் சுமார் 15.6 லட்சம் டன் தாவர எண்ணெய் இருந்ததாக கூறப்படுகிறது.

## சென்ற பருவத்தில் காபி ஏற்றுமதி 33% அதிகரிப்பு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு,புதுடெல்லி
சென்ற காபி பருவத்தில் (அக்டோபர் 2010–செப்டம்பர் 2011) நாட்டின் காபி ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 33 சதவீதம் அதிகரித்துள்ளதாக காபி வாரியம் தெரிவித்துள்ளது. காபி உற்பத்தியில் முன்னணியில் இருக்கும் நம்நாடு உலக காபி உற்பத்தியில் 4.5 சதவீத பங்கினை கொண்டுள்ளது. உற்பத்தியில் 70–லிருந்து 80 சதவீத வரையிலான காபியை இத்தாலி, ஜெர்மனி மற்றும் ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்கிறது.
கடந்த பருவத்தில் ஏற்றுமதி அளவு அடிப்படையில் 3,58,278 டன் ஆகும். இந்திய ரூபாய் மதிப்பில் இது ரூ.5,135 கோடி ஆகும். டாலர் மதிப்பின் அடிப்படையில் இது, வியக்கத்தக்க வகையில் 81 சதவீதம் அதிகரித்து 57.79 கோடி டாலரிலிருந்து 104.60 கோடி டாலராக உயர்ந்துள்ளது. இது, இந்திய காபிக்கு வெளிநாடுகளில் நல்ல விலை கிடைத்துள்ளதை எடுத்துக் காட்டுகிறது. ஏற்றுமதி அதிகரிப்பதால் நாட்டின் அன்னியச் செலாவணி கையிருப்பு அதிகரித்து, பொருளாதாரத்தில் சிறப்பான வளர்ச்சி ஏற்படும். வர்த்தக பற்றாக்குறை கட்டுக்குள் வரும்.

# மலைபோல் குவிந்த பூக்கள்



ஆயுத பூஜை விழா நாளை விமரிசையாக கொண்டாடப்படுகிறது. இதையொட்டி கோவை பூ மார்க்கெட்டில் பூக்கள் மலை போல குவிந்து உள்ளன. அவற்றை தரம் பிரித்து மாலையாக கட்டும் பணியில் பெண்கள் ஈடுபட்டு உள்ளதை படத்தில் காணலாம்.